செ.வெ.எண்: 14 நாள்:09.03.2020

தேசிய கால்நடை நோய் தடுப்புத் திட்டம்–கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் –1–வது சுற்று

கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர்

திரு.த.அன்பழகன்.இ.ஆ.ப.அவர்கள் தகவல்

கரூர் மாவட்டம் , கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் முதலாவது கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி பிப்ரவரி மாதம் 28 -ம் தேதி முதல் கால்நடைகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து கால்நடைகளுக்கும் காதுவில்லைகள் அணிவிப்பது இந்திய அரசாங்கத்தால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது, மேலும் கால்நடைகளுக்கு வழங்கப்படும் காதுவில்லை எண் கால்நடை பெருக்கம் மற்றும் நலப்பணிகள் தகவல் தொகுப்பில் தொகுக்கப்படவுள்ளது.

எனவே கால்நடை பராமரிப்புத் துறையினர்கள் கிராமத்திற்கு வரும்போது தடுப்பூசி பணியினை மேற்கொள்வதற்கும் INAPH எண் காதுவில்லை அணிவிக்கவும் கிராம மக்கள், விசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

காதுவில்லைகள் கட்டாயமாக்கப்பட்டதற்கான காரணம் கால்நடைகளை அடையாளப்படுத்தவும், உரிமையாளர்கள் யாரென அறிவதற்கும் கால்நடைகள் தொலைந்துபோகும் பட்சத்தில் கண்டறிவதற்கும் பிற நலத்திட்ட பணிகள் செயல்ப்படுத்துதற்கும் இன்றியமையாததாக இருக்கும்.

மேலும் இனிவருங்காலங்களில் இந்திய அரசாங்கம் மற்றும் தமிழக அரசால், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் அனைத்திற்கும் கால்நடைகளின் காதுவில்லையின் எண்கள் அவசியம் என்பதால் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் அதன்படி அனைத்து தகுதியுள்ள பசு, எருமைகளுக்கும் 12 இலக்க ( bar code உள்ள ) காது வில்லைகள் பொருத்தப்பட்டு. அதன் விவரங்களை, மத்திய அரசின் கால்நடைகள் உற்பத்தி மற்றும் நலன் சார்ந்த தகவல் வலைதலத்தில் ( INAPH) பதிவு செய்யப்பட உள்ளது.

மேலும் கால்நடைகளின் உரிமையாளர்கள் தங்களின் ஆதார் அடையாள எண் மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றை தவறாமல் தடுப்பூசி முகாமிற்கு கொண்டு வர வேண்டும்.

காதுவில்லைகள் அணிவதால் கால்நடைகளுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாது கரூர் மாவட்டத்தில் 1,91,400 கால்நடைகளுக்கு காதுவில்லைகள் அணிவிக்கப்படுகிறது.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.